பக்கங்கள் பத்து

Registered as a News Paper in Sri Lanka

விலை ரூபா: 5-00

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

பொதுசன நூலகம் - 1 DEC 2001 யாழ்ப்பாணம்

# வலம்புரி

VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 16 சனிக்கிழமை (01-12-2001) தொலைபேசி: 3378 ஒலி 346

நாளுக்கு நாள் மாறும் நவ நாகரிக ஆடை வகைகளுக்கு:
காவேரி பட்டுச் சோலை
48, பெரியகடை வீதி யாழ்ப்பாணம்
T. P 2333

## நாரந்தனைதாக்குதலை கண்டித்து பல்கலை மாணவர் இன்று பேரணி

### பேரம்பலத்தின் இறுதிச்சடங்கும் இன்று

[யாழ்ப்பாணம்]

நாரந்தனையில் கடந்த 28 ம் திகதி இடம்பெற்ற தாக்குதல், வன்முறைச் சம்பவத்திற்கு எதிர்ப்பும் கண்டனமும் தெரிவித்து இன்று யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் பேரணியொன்றை நடத்தவுள்ளதாக தெரியவந்துள்ளது

யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள இக் கண்டனப் பேரணி இன்று காலை 10 மணிக்கு யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து ஆரம்பமாகி யாழ் பஸ் நிலையத்தை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை நாரந்தனைச் சம்பவத்தில் கொல்லப்பட்ட யாழ் பல்கலைக்கழக ஊழியர் ஏரம்பு பேரம்பலத்தின், உடல் இன்று காலை பத்து மணிக்கு கைலாசபதி அரங்கில் வைக்கப்பட்டு இறுதி அஞ்சலி செலுத்தப்படுமென (10 ம் பக்கம் பார்க்க)

## டக்ளஸ் பதிலளிப்பார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண குடா நாட்டில் வாழும் மக்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு பணிகள் தொடர்பாக எழுப்பும் கேள்விகளுக்கு வானொலி மூலம் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா பதிலளிக்கும் நிகழ்ச்சிக்கு இன்றும் நாளையும் காலை 10 மணி முதல் யாழ்சேவையிலும், வசனம்பாடி சேவை நேரடி ஒலிபரப்பு செய்யப்படவுள்ளது இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கேள்வி எழுப்ப விளையும் நேயர்கள் 3722 3723 3724 தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்;

## மீனவர்கள் தாக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

குருநகர் கடற்பகுதியில் சிறுத்தீவுக்கு அண்மையில் பேராறு கடலில் மீன்பிடிக்கச் சென்ற சுமார் 15 கடற்றொழிலாளர்கள் கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி திருப்பி அனுப்பப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுக்காலை 7மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது; 10-ம் பக்கம் பார்க்க)

## நாரந்தனை வன்முறைச் சம்பவம்

# ஈ. பி. டி. பி. உறுப்பினர்கள் மூவரை கைதுசெய்ய யாழ். நீதிபதி உத்தரவு

### சட்டவிரோத ஆயுதங்களைக் களையவும் பணிப்பு

(யாழ்ப்பாணம)

ஊர்காவற்றுறை நாரந்தனையில் இடம்பெற்றமோதல் சமபவத்தில் ஏற்பட்ட இருவரின்மரணம் தொடர்பாக யாழ்நீதிவான் இ. த. விக்கினராஜாவின் உத்தரவின்பேரில் ஈ.பி.டி.பியின் தீவகஅரசியல் பொறுப்பாளர் நெப்போலியன், ஊர்காவற்றுறை பிரதேசசபைத் தலைவர் மதனராஜா, மற்றும் ஜீவன் ஆகியமூவரையும் நேற்றிரவு 8.30மணியளவில் நீதிவான் இல்லத்தில் ஊர்காவற்றுறை பொலிஸ் பொறுப்பதிகாரி ஆஜர்படுத்தினார்.

இவர்களில் ஜீவன் என்றசந்தேகநபரை இம்மாதம் 3ம்திகதி திங்கட்கிழமை வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறும் ஏனைய இருவரையும் 50ஆயிரம்ரூபா ஆட்பிணையில் செல்லுமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை நாரந்தனைப் பகுதியில் இடம்பெற்றமோதல் சம்பவத்தில் ஏரப்பு பேரம்பலத்தின் கொலை தொடர்பாக ஈ.பி.டி.பி தீவகப் பொறுப்பாளர் நெப்போலியன், ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் மதனராஜா மற்றும் ஜீவன் ஆகியோரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் படுத்துமாறு யாழ் நீதிவான் நீதிமன்ற நீதிபதி இ.த. விக்கினராஜா நேற்று உத்தரவிட்டுள்ளார்.

இம் மூன்று சந்தேக நபர்களையும் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டார்.

நாரந்தனையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் கொல்லப்பட்ட ஏரம்பு பேரம்பலத்தின் மரணவிசாரணை யாழ் நீதிவான்நீதிமன்றில் நீதிவான் இ.த. விக்கினராஜா முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

[10ஆம் பக்கம் பார்க்க]

## நெப்போலியன், மதனராஜா, ஜீவன் நீதிவான் முன்னிலையில் ஆஜர்!

### இருவர் பிணையில் விடுதலை

[யாழ்ப்பாணம்]

நாரந்தனை கொலை சம்பவம் தொடர்பாக நீதிவானின் உத்தரவை அடுத்து ஈ.பி.டி.பி தீவக அரசியல் பொறுப்பாளர் நெப்போலியன் ஊர்காவற்றுறைபிரதேச சபைத் தலைவர் மதனராசா மற்றும் ஜீவன் ஆகியோர் நேற்றிரவு நீதிவான் இ தவிக்கினராசாவின் இல்லத்தில் ஊர்காவற்றுறை பொலிஸ் பொறுப்பதிகாரியால் ஆஜர் படுத்தப்பட்டனர்.


நாரந்தனையில் இடம்பெற்ற மோதல் சம்பவம தொடர்பாக பொலிசார் மேற்கொண்ட விசாரணையின் போது அளிக்கப்பட்ட சாட்சிகளின்படி நெப்போலியன் மதனராசா ஆகிய இரு சந்தேநபருக்கும் இக் கொலையுடன் நேரடி தொடர்புஇருந்ததற்கான சாட்சியங்கள் காணப்படாததாலும விசாரணை இப்போதிருக்கும் நிலையில இக்கொலையில் தொடர்பு படுத்தக்கூடியசான்றுகள் இல்லாதபடியாலும் இவர்கள் இருவரும் பொலிசாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தாம சம்பவம் நடந்த இடத்தில் இருக்கவில்லை என்றும்

(10-ம் பக்கம் பார்க்க)

உண்மையான சுதந்திரமும் சகோதரத்துவமும் சமாதானமும் மலர மீன்சின்னத்திற்கு வாக்களியுங்கள்



சுயேச்சைக் குழு



X

தம்பிராசா சுபத்திரன் (றொபேட்) ஈ. பி. ஆர். எல். எவ்.

(4041)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 28 வயது (மிருக சீரிடம் 1ம் பாதம்) லண்டன் வதிவிட உரிமையுள்ள Computer Engineerற்கு 25 வயதிற்குட்பட்ட அழகிய நற்பண்புள்ள பட்டதாரிப் பெண் தேவை. தரகர் தேவையில்லை முழுவிபரங்களுடனும் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி விளம்பர இல-229, மே/பா, வலம்புரி.
(சி-2195)

# ஊர்காவற்றுறை சம்பவம் உடன் விசாரணை நடத்த பொலிஸ்மா அதிபர் உத்தரவு

(கொழும்பு)

ஊர்காவற்றுறை நாரந்தனையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக உடனடி விசாரணை நடத்துமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து. பொலிஸ்மா அதிபர் லக்கி கொடிதுவக்கு யாழ். பொலிஸ் அத்தியட்சகர் குடாக் கெட்டிக்கு அவசர உத்தரவு பிறப்பித்து உடன் விசாரணை மேற் கொள்ளுமாறு கேட்டுள்ளார். இத

(10ஆம் பக்கம் பார்க்க)


# அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் 2001

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| 138 | வீரபத்திரர் ஆலயம் காந்தியூர் புலோலி | 300; 000 |
| 139 | குருக்கட்டு சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை வல்லிபுரம் | 200, 000 |
| 140 | வில்விபாதி முருகன் ஆலய பரிபாலன சபை புலோலி வடமேற்கு | 200. 000 |
| 141 | பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் பருத்தித்துறை | 2000'000 |
| 142 | உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் பருததித்துறை | 500' 000 |
| 143 | ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் | 700, 000 |
| 144 | குருமணல் கந்தசாமி கோவில் பிரதான வீதி புலோலி வடக்குஇ பருத்தித்துறை | 200, 000 |
| 145 | சிறுவர் பூங்கா குடத்தனை | 300, 000 |
| 146 | புனித ஆரோக்கிய அன்னை தேவாலயம் குடத்தனை | 250, 000 |
| 147 | ஞானவைரவர் ஆலயம் வீராத்துப்பளை | 200, 000 |
| 148 | பருத்தித்துறை நகரசபை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் | 5 00,0 0 |
| 149 | நண்பர்கள் விளையாட்டுக் கழகம் அல்வாய் | 400, 000 |
| 150 | மாறாம்புலம்மாணிக்க பிள்ளையார்கோவிலடி அல்வாய் | 200. 000 |
| 151 | ஆத்தியடி பிள்ளையார் கோவில்பருத்தித்துறை | 150, 000 |
| 152 | யா- மணற்காடு றோ.க.த.க. பாடசாலை | 300, 000 |
| 153 | சக்கோட்டை கடற்றொழிலாளர்கூட்டுறவுச் சங்கம் சக்கோட்டை | 500, 000 |

(சி-2952)

# நலம்பெறப் பிரார்த்திக்கிறோம்



வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர்; தமிழ்க் கூட்டமைப்பின வேட்பாளர்; திரு. M.K. சிவாஜிலிங்கம் (இல.6) அவர்கள் விரைந்து நலம் பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

வடமராட்சி மக்கள்

(4038)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 30-11-1944

மறைவு 30-11-2001

## அமரர் சபாபதி வரதராஜா

(ஒப்பிலாமணி)

(பிரபலநகைவியாபாரி - கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்)

அவர்கள் திடீரென மறைந்த செய்தி அறிந்து அதிர்ச்சி அடைந்தோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது கவலையையும் ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவித்து அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுவதுடன் எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்;

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நியூ நகுலா ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

நியூ லலிதாஸ் ஜுவல்லறி
171 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்

நகுலா நகைமாடம்
241 G கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்

[4039]

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## ஏரம்பு பேரம்பலம்

(யாழ் பல்கலைக்கழக ஆய்வு கூட உதவியாளர்)

அராஜக வாதிகளின் வாள் வெட்டுக்கு
அநியாயமாக இன்னுயிர் வீழ்ந்தது;
எமக்கு பக்கபலமாக இருந்த பலமே
பேரம்பலமே எங்கையா சென்றாய்!
கட்சியின் உயர்வு தீவகத்தின் மீட்சி, கூட்டணியின்
வெற்றி யென்று நாளும் பொழுதும் கூறுவாயே!
தீவகமக்கள சுதந்திரமாக வாழ வேண்டும்;
அடிமைத்தனம் நீங்க வேண்டும்.
இதுதான்உனது இலட்சியமாக கொண்டு செயல்பட்டாயே
அந்த கொள்கை பற்றுள்ளவனை எமது கட்சி இழந்துவிட்டதே அந்தோ! நானும் இழந்துவிட்டேன்

நீ சிந்திய குருதி உமது தீவக மண்ணை நனைத்தது மட்டுமல்ல, இளைஞர்கள் மனதினையும் நனைத்துவிட்டது

இந்நிகழ்வு சுதந்திர தீவகத்தின் ஆரம்பகட்டமே தீவகத்தின் அடிமைத் தனத்தை எமது கட்சி சுதந்திர தீவகமாக மாற்றியே தீரும்! மாற்றியே அமைப்போம்!

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தாருக்கும்குழந்தைகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்,

"ஓம் சாந்தி"

நடராசா ரவிராஜ்
யாழ் மாநகர முதல்வர்
(சட்டத்தரணி)

(சி-2956)

# அன்பார்ந்த வாக்காளர்களே!



★ தன்வளர்ச்சியை முன்னிலைப்படுத்தாது, தேடிவந்த பாராளுமன்றப் பதவிகளை ஏற்காது. இளைய தலைமுறைதலைவர்களுக்கு விட்டுக்கொடுத்து ஊக்குவித்த தலைவனுக்கு உங்கள் விருப்புவாக்கு ஒன்றுஉரித்துஉடையதல்லவா?

★ போரின் கொடும் விளைவுகளால் அல்லல்பட்டு ஆற்றாது அழும் தமிழனின் நிலையை மனம் கசிந்துருகி பாராளுமன்றில் எடுத்துச் சொல்லத்தவறாத தலைவனுக்கு ஒரு விருப்புவாக்கு வழங்க வேண்டாமா :- -

★ நான்கு தமிழ்கட்சி கூட்டமைப்பின் சின்னம் உதயசூரியனுக்கு உங்கள் வாக்குகளை அளித்து முதன்மைவேட்பாளர் வீ. ஆனந்தசங்கரியின் இலக்கம் 3க்கும் ஒரு விருப்பு வாக்கு அளித்திடுவீர்,

தமிழர் விடுதலைக் கூட்டணி

## வீ. ஆனந்தசங்கரி

X | 3 X

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

# யாழ். மாவட்ட தமிழ் வேட்பாளர்

# ஞா. ஆனந்தகுமார்

## உங்கள் கனவு நனவாகிறது.

- டிசம்பர் 5ம் திகதியாழ்வாழ்மக்களின் ஆணையுடன் இலட்சக்கணக்கான வாக்குகளால் வெற்றியடையும் ஞா. ஆனந்தகுமார் பாராளுமன்றத்தில் புதிய பாதை வகுத்து புதிய தலைமை வழங்குவார்.

- தமிழர் உரிமைப் போராட்டத்திற்கு எதிரிகள்சிங்கள மக்களல்ல சிங்கள பேரினவாத அரசியல் வாதிகளே எதிரிகளாகும். இந்த அரசியல் வாதிகளின் போலி அரசியல் தனத்தையும், சுயநல அரசியல் லாபத்தினையும் பாராளுமன்றத்தில் வெளிக் கொணர்வார்.

- யுத்தத்தை நிறுத்த சமாதானத்தை உருவாக்குவோம் எனக் கூறி 94ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் மக்களை ஏமாற்றி தமிழர் விடுதலைப் புலிகளை தடை செய்தது இந்நிலை மாறவும் சமாதானம் உருவாகவும் பாராளுமன்றத்தில் குரல் கொடுப்பார்.

- யுத்த பித்துப் பிடித்து பிதற்றுகின்ற பிரதமரும் இதற்கு எண்ணெய் வார்க்க வந்திருக்கும் ஜே. வி. பி. தலைவர் சோமவன்ச அமரசிங்கவும் வாயடைக்க தமிழர் உரிமைப் போராட்டத்திற்கு பாராளுமன்றத்தில்உறுதுணையாய் நிற்பார்.


- யுத்தத் தீயில் நாட்டின் பொருளாதாரமும், சுற்றாடலும் அழிந்து கொண்டிருக்கின்றது. இந்த நிலையை மாற்றி புதுயுகம் காணவும், பொருளாதார வளம் பெருகவும் சுற்றாடல் சீர்பெறவும் கொள்கை வகுத்திடுவார்.

- தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில உயிர் தியாகம் செய்தவர்களின் எண்ணங்கள் ஈடேறவும் அவர்களின் தியாகங்கள் உயிர் பெறவும் உறுதியாய் உழைத்திடுவார்.

### 5ம் திகதி யாழ் மக்களின் ஏகோபித்த தெரிவாக ஞா. ஆனந்தகுமார் இருக்கட்டும்.

### மக்கள் தொண்டன், புன்னகை மன்னன், பொறுமையின் சின்னம் ஞா. ஆனந்தகுமாரை பாராளுமன்றம் அனுப்ப உறுதியாய் உழைத்திடுவோம்.

பத்தொன்பது வருடகால
வேள்வித் தீயால் விளைந்த
மாவீரர்களின் தியாகம்
எம தாயக மண்ணில்
தமிழ் உரிமை
சுதந்திரம்
பண்பாட்டு பாரம்பரியங்களை
வென்றெடுக்கும
புனிதப் போராட்டமென்பதை
ஒன்றுபட்ட மக்கள் சக்திமூலம்
சர்வதேச உலகிற்கு வெளிக்காட்ட
ஞானசுந்தரம் ஆனந்தகுமாரை
வெற்றிபெறச் செய்வோம்



ஞா. ஆனந்தகுமார்



[4084]

# விடுதலைப் போராட்டத்தில்
# 17,472 போராளிகள் வீரச்சாவு

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில 1982ம் ஆண்டு நவம்பர் 27ந்திகதி முதல் இதுவரை 17,472 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

மாவீரர் தினத்தையொட்டி மாவீரர்களின் பெயர்பட்டியல் அடங்கிய உத்தியோக பூர்வ அறிக்கையொன்றை விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்

அவ்வறிக்கையில் 1982ம் ஆண்டு முதல் 2001ம் ஆண்டு நவம்பர் 26ந்திகதிவரையான 18வருடகாலப் பகுதியில் 13744 ஆண் போராளிகளும் 3728 பெண் போராளிகளும் வீரச்சாவடைந்துள்ளனர்.

வீரச் சாவடைந்த 239கரும்புலிகளில் 64பேர் பெண்கள் எனவும் 161 கடற்கரும்புலிகளில் 46பேர் பெண்கடற்கரும்புலிகள் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது

இதனைத் தவிர ஈரோஸ் அமைப்பைச் சேர்ந்த 264 பேரும் எல்லைப் படையைச் சேர்ந்த 268பேரும் மாவீரர் பட்டியலில் உள்ளடக்கப் பட்டுள்ளனர்.

(ந-4)

# க.பொ.த.(உ-த)பரீட்சை முன்னணி முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

2001 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் நடைபெற்ற க.பொ.த (உ-த) பரீட்சை முடிவுகள் குடாநாட்டுப் பாடசாலைகளுக்கு உத்தியோகபூர்வமாக அனுப்பி வைக்கப்பட்டன.

பாடசாலைகளின் முன்னணிப்பெறுபேறுகள்வருமாறு:

### சென்ஜோன்ஸ் கல்லூரி
### கணிதப்பிரிவு

எம். மதுரன்-3ஏ ரி பசில்ஸ்ரிவ்- 2ஏ,பி, ஏ டினேஸ் எபனேசன்- 2ஏ,பிபி. குகானந்தன்- ஏ.பி,சி, சி.குலேந்திரா - ஏ.பி சி,

### விஞ்ஞானப்பிரிவு

பி. நிஷாகன்- 3ஏ, கே.சஜீவன்- 3ஏ .எஸ். சசிகுமார்- 3ஏ, ஜி சேந்தன்-3ஏ,ரி தீவாகர்- 2ஏ.பி. எஸ் ஹரிதாசன் 2ஏ.சி. ரி,பிரஷாந்தன்-2ஏ.பி யூ கோபி- ஏ,2பி. கே. யூநிதாகரன்-ஏ.பி.சி கே.காண்டீபன்- ஏ,பி,சி, ஆர். முரளீதரன்- ஏ,பி,சி,ஆர். சுதர்சன் - ஏ.2பி, ஜி.றொசான் ஜெயநேசன்- ஏ.பி,சி,

### வர்த்தகப்பிரிவு

வி. ரவிமோகன- 3ஏ. கே. அலன் ஜெயகரன்- 3ஏ எல். தனுஷன்-2ஏ.பி,பி குமராஜ்- 2ஏ,பி,எஸ். ரிசிகேசன் - 2ஏ பி, என் காந்தீபன்- ஏ,2பி, ரி, பிரதீபன்-ஏ.2பி ரி, சுதன்- ஏ,2பி, ரி யுவராஜ் ஏ,பி,சி,ரி, வினிஸ்ராஜ்- ஏ,2பி,

### சுண்டுக்குளி மகளிர்கல்லூரி
### விஞ்ஞானப்பிரிவு

ரா. பிருந்தா 3ஏ, கு. விஷாஜினி 2ஏ,பி, க. கவிதா- 2ஏ, பி, ஹமி பிரேமினா- ஏ,2பி, செ. பகீரதி- ஏ,2பி, க. சிந்துஜா- ஏ.பி.சி, யோ. மியூறின் சிந்துஜா- ஏ, 2சி,

### வர்த்தகப்பிரிவு

செ லிடியா மிஷாணி 3ஏ, யோ யசிதரா- ஏ,2பி, யு ஜீடித் பெனசியூல- ஏ,2பி, க. ஷனந்தி- ஏ,2பி, ஷ சிந்துஜா- ஏ,2பி, வி. மெரிற்றா -ஏ,2பி, ஆ சிந்துஜா- ஏ,பி,சி ஆ பிரவீனா- ஏ,பி,சி.

### கலைப்பிரிவு

தி. ஜெயாமினி- ஏ,2பி, செ, செலவகுமாரி- ஏ,2பி கு. சுகந்தி- ஏ,பி,சி, கொ. நிலோஜி- ஏ பி,சி, ம. மதுரா- ஏ,பி,சி, பே,பிரதீபா- ஏ,பி,சி, செ, ஷாமினி ஏ, பி, சி சோ.நிவதா-ஏ,2சி ம.அன்டயானா- ஏ,2சி, க.தர்ஷினி ஏ,2சி, ச. ஷகிலா- ஏ,2சி, பி. ஜீன் லைலா- ஏ,பி,சி,

### கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலயம்

எம். சசிக்குமார- 3ஏ எஸ், சுதாகரன்- 3ஏ, பி, மதிவதனன் - 2ஏ பி, ஜே, சதீஸ்குமார்- 2ஏ பி ஆர் சுகிர்தன்-2ஏ,பி. கே. சுகிர்தா- 2ஏ,பி, எம், அபிராமி- ஏ 2பி ஜி. லெனின் குமார்- ஏ,2பி, வி, தனேஸ்- ஏ,2பி. ரி, சற்சொரூபன்-ஏ,2பி,ஜே. நிஷாகர்- ஏ,2பி.எஸ். கார்த்திகா- ஏ.2பி, வை, ஐங்கரன்- 2,ஏ,சி, கே. லக்ஸ்மணன்- ஏ.பி.சி. பி. யமுனா-ஏ,பிசி. பி. கார்த்திகா- ஏ,பி,சி. எஸ், சறுயா- ஏ,பிசி. ரி,நந்தரூபன்- ஏ பிசி. எஸ். காந்தீபன்- ஏ. பி சி.பி, கங்கா- ஏ பிசி, எஸ்- விஜிதா- ஏபிசி ஏ- கல்யாணி- ஏ பி,சி, ரி கவிதா- ஏ பி சி பி- பிரதீபா- ஏ பி சி-

### ★ புனித பத்திரிசியார் கல்லூரி
### கணிதப்பிரிவு

ரி. வி. கிளாறோ- 2ஏசி,. எம்,ஆர். லக்ஸ்மன்- 3ஏ. எம் இ. எவ், வின்ஸ்சல்- 2ஏசி, பி சிராளன்-ஏ2சி ,கே. ரவிச்சந்திரன்- ஏ 2சி

### விஞ்ஞானப்பிரிவு

ஜே ஜான்சன் 3ஏ. கே. சேந்தன் -2ஏபி

### வர்த்தகப்பிரிவு

எவ். ஜி. றுவாலசன்- 3ஏ ரி.எல். வர்ணராஜ்-3ஏ, எம். றெறோன்- ஏ2பி வி. லக்மன் ஏ2பி,ஏ. எஸ்.எம். மில்நோய் ஏபிசி, ஏ. ஷெல்ரன்-2ஏசி,ஏ. எக்ஸ். றெமில்சன்- 2ஏபி, எஸ் சந்துரு ஏ2சி, ஆர் றொகஸ்- ஏ2சி, ஜி அருள்ராஜ்- 2ஏபி. ஏ. என்.சுரேன்-ஏ2சி,

### கலைப்பிரிவு

எம்எச் ஹட்சன் -2ஏபி, பி ஆர் ஹெல்றிஸ் 2ஏபி, ஜே அருநேசன் -ஏ3பி. எஸ். ஏ. றீகன் . ஏபிசி,

### யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் (ஆங்கிலபாடசாலை) சாலை)
### கலைப்பிரிவு

அஜரனி டயானா- 3ஏ, எஸ் சுபாசினி-3ஏ. ஜே கிருஷாந்தினி-3ஏ, ஏ டெனிசியா -3ஏ, பி சர்மிலா -3ஏ, ஜே நாகநந்தினி - 2ஏபி. ஜே ரூபிகா - 2ஏபி, ஜி.பி ஏஞ்சலின் றோமி- 2ஏபி, சி றெஜி -2ஏசி, சி டினாமேரி-2ஏசி. என ஜெனிற்றா- 2ஏபி. ஜே அனற்வினு சியா 2ஏபி, எவ் அனுஷ்ரி- 2ஏபி,

### வர்த்தகப்பிரிவு

கே வினோதிகா-2ஏசி, கே. சுபாசினி-2ஏபி,

[உ-106]

# பல்கலைக்கழகத்தில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

நாரந்தனைப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட யாழ் பல்கலைக்கழக ஊழியர் ஏ. பேரம்பலம் அவர்களின் பூதவுடல் அஞ்சலிக்காக பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று காலை10 மணிக்கு வைக்கப்படவுள்ளது

அஞ்சலி நிகழ்வுக்கான ஏற்பாடுகளை யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மேற்கொண்டுள்ளது.

(இ)


தெரிவத்தாட்சி அலுவலரின் அலுவலகம்
செயலகம்
யாழ்ப்பாணம்

## அரசாங்க அறிவித்தல்

### பாராளுமன்றத் தேர்தல் 05.12.2001

### உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகம்

பளை, கைதடி, சாவகச்சேரி ஆகிய அஞ்சல் அலுவலகப் பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்த வாக்காளர்களின் நலன் கருதி அவர்களுக்குரிய உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகள் 2001.11.30ம் திகதியும் 2001.12.02ம் திகதியும் மானிப்பாய் அஞ்சல் அலுவலகத்தில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 3.30 மணி வரைவிநியோகிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்றும் இதுவரை உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளைப் பெறத் தவறிய இப்பிரதேச இடம் பெயர்ந்த வாக்காளர் மேலே குறிப்பிட்ட திகதிகளில் மானிப்பாய் அஞ்சல் அலுவலகத்திற்குச் சென்று அவற்றைப் பெற்றுக்கொள்ளும்படியும்இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

க சண்முகநாதன்
தெரிவத்தாட்சி அலுவலர்,
தேர்தல் மாவட்டம் இல. 10—யாழ்ப்பாணம்.
29. 11. 2001 (கி/2948)




பொதுத் தேர்தலில் 05 - 12 - 2001
புது வரலாறு படைக்க
## வெற்றி உறுதியாகி விட்டது!

| சி. கா. செந்திவேல் | சோ. தேவராஜா |
|---|---|
| முதன்மை வேட்பாளர் | சட்டத்தரணி வேட்பாளர் |
| இல 6 | இல 12 |

★ தமிழ் இனத்தின் போர்க் குரலாக
★ உழைக்கும் வர்க்கத்தின் உரிமைக் குரலாக
★ சமூக நீதிக்கான மக்கள் குரலாக
★ அனைத்து ஒடுக்கு முறைகளுக்கும் எதிர்க் குரலாக

பாராளுமன்றத்தில் ஒலிக்கச் செய்ய
மக்களின் தெரிவு
மணிக் கூட்டுச் சின்னம்

## ஜனநாயக இடதுசாரி முன்னணி
(புதிய - ஜனநாயகக் கட்சி)



கா. கதிர்காமநாதன்
(செல்வம்)
வேட்பாளர்
இல 4

கா. பஞ்சலிங்கம்
வேட்பாளர்
இல 5

கோப்பாய்-நல்லூர் தொகுதி மக்கள்
(4036)






பொதுத் தேர்தல்-2001
தமிழேழுச்சு-சேவையே வாழ்வுஎங்கள்கூட்டுறவாளன்
## திரு. சி. சிவமகாராசா அவர்களுக்கே எம் வாக்கு



தமிழர் விடுதலைக் கூட்டணி



(C - 2921)

## இன்று ஒரு தகவல்

# சிறந்த மாணவன் எவன்?

துரோணர் தன்னிடம் விற் பயிற்சி பெறும் மாணவர்களில் யார் சிறந்தவர் என்பதை அறியவிரும்பினார். துரியோதனனை அழைத்து அவர், ''அதோ அந்த மரத்தில் கிளி ஒன்று அமர்ந்துள்ளது. உன் வில்லில் அம்பு பூட்டி அதற்குக் குறிவை'' என்றார். ''ஐயா தாங்கள் சொன்னபடியே செய்துவிட்டேன், அப்பினால் அந்தக் கிளியை வீழ்த்தவா?'' என்று கேட்டான் துரியோதனன். ''உன் கண்ணுக்கு இப்பொழுது மரம் தெரிகிறதா? சொல்,, என்றார் துரோணர்.

''தெரிகிறது ஐயா'' என்று பதில் சொன்னான் துரியோதனன். ''கிளை தெரிகிறதா? இலை தெரிகிறதா?'' என்று கேட்டார் துரோணர் எல்லாம் நன்றாகத் தெரிகின்றதையா'' என்று பதில்வந்தது. அமர்ந்திருக்கும் கிளி தெரிகிறதா? என்று கேட்டார் துரோணர். நன்றாகத் தெரிகிறது'' என்றான் துரியோதனன். குறிபார்த்தது போதும் உன் இடத்திற்குச் செல் என்றார் துரோணர்.

அடுத்ததாக அர்ச்சுனன் வந்தான். ''உன் வில்லில் அம்பு பூட்டி அந்தமரத்தில் அமர்ந்திருக்கும் கிளிக்குக் குறிவை'' என்றார் துரோணர். அவனும் அப்படியே செய்தான். இப்பொழுது உனக்கு மரம் தெரிகிறதா? என்றுகேட்டார் துரோணர். ''இல்லை என்றான் அர்ச்சுனன். கிளை, இலைகளாவது தெரிகிறதா? என்று கேட்டார் துரோணர். இல்லை என்றான் மீண்டும் அர்ச்சுனன்,

''உனக்கு என்னதான் தெரிகிறது?'' என்று கேட்டார் துரோணர். ''ஐயா! இந்த அம்பு பாயவேண்டிய கிளியின் கழுத்து மட்டுமே என் கண்களுக்குத் தெரிகிறது நீங்களோ மற்றும் மற்ற பொருள்களோ எதுவும் எனக்குத் தெரியவில்லை. கிளியை வீழ்த்தவா சொல்லுங்கள்'' என்றான் அர்ச்சுனன்.

அவனைக் கட்டித்தழுவிக் கொண்ட துரோணர் 'அர்ச்சுனா நீயே என் சிறந்த மாணவன். உனக்கு மன ஒருமைப்பாடு கை வந்துள்ளது. வில்லாளி குறிபார்க்கும்பொழுது வேட்டைப் பொருளைத்தவிர எதுவுமே அவன் கண்களுக்குத் தெரியக்கூடாது'' என்றார் துரோணர்.

**பேராசிரியர் எ. சோதி**

# நாரந்தனை தாக்குதல் சம்பவம்
# டக்ளஸ் மீதான குற்றச்சாட்டை முற்றாகமறுத்து ஈ.பி.டி.பி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையின் நாரந்தனை கிராமத்தில் நிகழ்ந்த அசம்பாவிதங்களின் போது செயலாளர் நாயகம் அமைச்சர் கே. என் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நேரில் சமூகமளித்திருந்ததாகக் கூறப்படுவது முற்றிலும் தவறானதும் பொய்யானதும் ஆகும்.

இவ்வாறு ஈ.பி.டி.பி நேற்று முன்தினம் வெளியிட்ட செய்திக்குறிப்பில்தெரிவித்துள்ளது அதில்மேலும்தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

இந்தத் துரதிஷ்டவசமான துக்ககரமான சம்பவங்கள் இடம்பெற்றநேரத்தில் அமைச்சர் கே என் டக்ளஸ் தேவானந்தா அமைச்சு அலுவலகத்தில் குழுமியிருந்தசுமார்மூவாயிரத்துக்கும் அதிகமானவர்கள் மத்தியில் உரையாற்றிக் கொண்டிருந்தார் என்பது சகலரும் அறிந்த விடயம்எனினும் இந்த அனர்த்தத்தைப் பயன் படுத்தி அரசியல் லாபம் தேட முயலும் சக்திகள் வழமை போல் அவதூறுப் பிரசாரத்தைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளனர் பாதுகாப்பு அரண் மனையிலிருந்து நேரடியாகத் தீவகத்திற்குச் சென்று இத்தாக்குதலை வழிநடத்தியுள்ளார் என்று தொழில் நுட்பக் கல்லூரிமாணவர் ஒன்றியத்தின் பெயராலும், கட்சியின் உயர்தலைவரே இக்கொடூரத்தை நேரடியாகநின்று நெறிப் படுத்தியிருக்கின்றார் என்று உயர் தொழில் நுட்ப மாணவர்ஒன்றியத்தின் பெயராலும் விடுக்கப்பட்டுள்ள அறிக்கைகள் அப்பட்டமான பொய்யாகும்.

தாக்குதல் சம்பவத்தின் பின்பு வைத்தியசாலைக்கு வந்து கொண்டிருந்த எமது ஆதரவாளர்களை வழியில் பார்த்து நக்கலாகச் சிரித்த முகத்துடன் அமைச்சர் மன்னிப்புக் கேட்டுள்ளார் என்ற சுரேஸ் பிரேமச்சந்திரனின் கூற்று முற்றிலும் கற்பனையில் சோடிக்கப் பட்டதாகும்

இந்த அனர்த்தத்துடன் தொடர்பு படுத்தி ஈ-பி-டி-பி உறுப்பினர்கள் சிலரது பெயர்களும் பிரபல்யப்படுத்தப் பட்டு வருகின்றன எனினும் இவர்களும் கூட தேர்தல்பிரசார பணிகளில் வெவ்வேறு இடங்களில் ஈடுபட்டு இருந்துள்ளனர் குறிப்பாக வேட்பாளரும் ஊர்காவற்றுறை பிரதேசசபைத் தலைவருமான ந. மதனராஜா யாழ்ப்பாண நகரப் பகுதியில் இருந்ததை யாழ்ப்பாண நகரிலுள்ள முச்சக்கர வண்டி சாரதிகளும், நெப்போலியன் நெடுந்தீவு பிரதேசத்தில் இருந்ததை நெடுந்தீவு மக்களும் நன்கறிவர் எனவே இவர்கள் இந்த துக்ககரமான அசம்பாவிதங்களில் நேரடியாக சம்பந்தப் பட்டிருந்தனர் என்பது முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# கியுடெக் அன்பளிப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சுருவில் ஐயனார் முன்பள்ளிக்கு கியுடெக் நிறுவனம் தளபாடம் மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்கியுள்ளது.

[உ-75]

# பாலர் பாடசாலை திறப்பு

[மந்திகை]

புலோலிமேற்கு நாவலர் பாலர்பாடசாலையின் புதிய கட்டடத் திறப்புவிழா அண்மையில்பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தலைவர் பொ. நடராஜா தலைமையில் நடைபெற்றது.

பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர்ஐ ஸ்ரீரங்கேஸ்வரன், பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி ஆகியோர் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு பாலர் பாடசாலையைதிறந்து வைத்தனர்.

வடக்கின் புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையினால் ஒதுக்கப்பட்ட 4 இலட்சம்ரூபா செலவில் இக்கட்டடம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

# இராசி பலன்

(01-12-2001)

(கார்த்திகை 16 சனி)
பிரதமை பி.இ 2.40 வரை
ரோகிணி மாலை 6 52 வரை
ராகுகாலம் 9.14–10 44
சுபநேரம் 3.14-4.44
அமிர்த சித்தம்

**மேடம்**
கௌரவக் குறைவு, காரிய தாமதம், வீண் விவாதம், பொருள் விரயம்.

**இடபம்**
வாக்குப் பலிதம், நண்பர்கள் உதவி. ஆழ்ந்த சிந்தை, மனச்சஞ்சலம்.

**மிதுனம்**
முயற்சி விருத்தி, தந்தை வழி உறவு, வியாதி, அமைதிக் குறைவு.

**கடகம்**
உறவினர் வருகை, தனலாபம், தொழில் சிந்தை, மனமகிழ்ச்சி.

**சிங்கம்**
அதிகபிரயாசை, தூரதேசச் செய்தி, தொழில் நன்மை, பிறர் உதவி.

**கன்னி**
உடல் நலக் குறைவு, அச்சமான நிலை, காரிய தாமதம், புதிய தொழில் சிந்தை.

**துலாம்**
முயற்சி தடங்கல், பகைவ தொல்லை, உறவின சந்திப்பு, உடல் வியாதி.

**விருச்சிகம்**
குடும்ப சுகம், திடீர் பயணம், தொழில் முன்னேற்றம், காரிய அனுகூலம்.

**தனுசு**
தொழில் சிறப்பு, இலட்சுமீகரம், காரியம் கைகூடும், ஆரோக்கியம்.

**மகரம்**
தாழ்ந்த சுபாவம், கலகம் காரிய இடைஞ்சல், போசன சுகம்.

**கும்பம்**
தொழில் கஷ்டம், ஆரோக்கிய குறைவு, முயற்சி பலிதம், அற்பர் உறவு.

**மீனம்**
காரிய அனுகூலம், தனவரவு, கூட்டுமுயற்சி, அந்நியர் சந்திப்பு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**

# தீவுப் பகுதியில் தேர்தலை ரத்துச் செய்யவேண்டும் சங்கரி கோரிக்கை

தீவுப் பகுதிகளில் எதிர் வரும் 5ம் திகதி நடைபெறவுள்ள தேர்தலை ரத்துச் செய்யவேண்டுமென சங்கரி தேர்தல ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவிடம் வலியுறுத்துமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவர் வீ. ஆனந்தசங்கரி ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவினரிடம் கேட்டுள்ளார்.

நேற்று முன் தினம் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவர் ஆனந்த சங்கரியைச் சந்தித்து யாழ் குடாநாட்டுத் தேர்தல நிலவரம்குறித்து கலந்துரையாடினார்.

இச் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்; நடைபெறவுள்ள தேர்தலில் கள்ளவாக்குச் சேகரிப்பதில் முனைப்புடன் சிலர் செயற்படுவதால் அதனை கட்டுப்படுத்தும் வகையில் வாக்களிப்பு நிலையத்தில் வாக்காளர்களின் தேசிய அடையாள அட்டையை பரிசோதித்து வாக்களிக்க அனுமதிப்பதன்மூலம் கள்ளவாக்கு போடுவதை முற்றாக நீக்கி விட முடியும் என்றும் ஆலோசனை கூறினார்.

இதேவேளை நாரந்தனை பகுதியில் இடம்பெற்ற தேர்தல் வன்முறைச் சம்பவம் குறித்தும் தேர்தல் கண்காணிப்பாளர்களிடம் ஆனந்தசங்கரி எடுத்துக் கூறினார். (இ)

# மரணச் சான்றிதழ் வழங்க அறிவுறுத்தக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தின் பாதுகாப்பில் இருந்த 167 பேர் அவர்களால் கொலைப்பட்டார்கள் என்று நாம் திடமாக நம்புகிறோம். எனவே இறப்பிற்கான நிவாரணப் பணத்தைப் அவர்களின் குடும்பத்தவர் பெறுவதற்கு இராணுவத்தால் அவர்கள் கொலைப்பட்டார்கள் என்பதற்கான மரணச் சான்றிதழ் வழங்க இங்குள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம.

இவ்வாறு வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தின் செயலாளர் ஜெனிவாவிலுள்ள ஐ நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

மேற்படி விடயம் குறித்து கடந்த ஒகஸ்ட் 27 ஆம் திகதியிட்டு யாழ். அரச அதிபருக்கு நான் அனுப்பியுள்ள கடிதத்தின் பிரதி எமக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் அனுப்பட்டது. எனக்கு அனுப்பப்பட்ட கடிதத்துடன் இணைக்கப்பட்ட பெயர் பட்டியலில் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட 265 பேரில் 167 பேர் வன்முறையால் இறந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறந்தவர்கள் பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்பிலிருந்து அன்று அசசெமு பிரிகேடியர் பகுதி 111இல ஒப்படைக்கப்பட்டார்கள்.

எனவே அவர்கள் பாதுகாப்புப்படையினரால் கொல்லப்பட்டார்கள் என்றே திடமாக நம்கிறோம்.

குறிப்பாக எமது சங்கம் நசுக்கப்படுவோரில் நலன் பேணும் மனிதாபிமான பணிகளில் ஈடுபட்டு வருகிறது. பலகாலமாக சிறையில் அடைக்கப் பட்டு விசாரணைகளுக்காக காத்திருக்கும் கைதிகள் தொடர்பாக ஸ்ரீலங்கா ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கஆவனசெய்யுமாறு மிகவும் முக்கியமான வேண்டுகோளாக தங்களைக் கேட்டுக் கொள்கிறோம். (எ)

# சித்தமருத்துவ கருத்தரங்கு இன்று மானிப்பாயில்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட சுகாதார தினத்தை முன்னிட்டு சர்வதேச லயன்ஸ் கழகங்கள் மாவட்ட 360-பி பிராந்தியம் 10 ஐச் சார்ந்த சுன்னாகம், கோப்பாய், மானிப்பாய் கோவில்பற்று, நல்லூர் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகங்கள் இணைந்து, சித்த மருத்துவ கருத்தரங்கு இன்று பி.ப 3 மணியளவில் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் பிராந்தியம் 10 இன் தலைவர் செ. ஞானராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

'தொய்வு நோய்க்கான சித்த மருத்துவ முறைகள்' என்ற விடயத்தில் இடம் பெறும் இக் கருத்தரங்கில் முன்னாள் வடகிழக்கு மாகாண சுதேச வைத்தியப் பணிப்பாளர் பூரண பசுபதிப்பிள்ளை, உரோமஸ்வரன், யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவு விரிவுரையாளர் லயன் வைத்திய கலாநிதி பொன் இராமநாதன், கைதடி சித்த ஆயுள்வேத போதனா வைத்தியசாலை உள்ளகப் பயிற்சி வைத்தியர்களான ச சிவதனி சி, மேகலைஆகியோர கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவுத் தலைவர் லயன் சீமாட்டி வைத்தியகலாநிதி மிதிலைச் செல்வி ஸ்ரீகாந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (உ)

# வவுனியா வளாகம் கண்டனம்

(வவுனியா)

இந்தநாட்டில் தலைதூக்கியுள்ள அடக்குமுறை கலாசாரத்திற்கு எதிராகமக்கள் முழுமையாக அணிதிரளவேண்டும என்று ஊர்காவற்றுறைச் சம்பவத்தைக் கண்டித்து வவுனியாவளாக மாணவர்கள விடுத்த அறிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது. [ம]

# அலுமாரிகள் அனுப்பிவைப்பு

(மந்திகை)

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு 10இரும்புப் பெட்டிஅலுமாரிகள் மேலதிக கல்விப்பணிப்பாளர் அலுவலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதே வேளை, வடமராட்சி வலய ஆசிரியர் பயிற்சி நிலையத்திற்கு ஒரு தொகுதி தளபாடங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டது: (உ-23)

# பரீட்சார்த்திகளுக்கு மண்ணெய்விநியோகம்

(மந்திகை)

கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்க எல்லைப்பகுதியில் க.பொ.த. சாதாரணதர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு இரண்டு லீற்றர் மண்ணெய் வீதம் வழங்கப்பட்டுவருவதாக சங்கத்தினர் அறிவித்துள்ளனர்,

க.பொ.த. சாதாரணதர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் அனுமதி அட்டைகளை காட்டி மேற்படி சங்கக்கிளைகளில் மண்ணெய்யைப் பெற்றுக் கொள்ளலாமென சங்கத்தின் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தெரிவித்துள்ளார். (உ-23)

பொதுசன நூலகம்

## பருத்தித்துறை பிரதேச சபை

# அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

## 2001

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு வடக்கு, கிழக்கு தமிழ் விவகாரங்கள் இந்து கலாசார அமைச்சர் மாண்புமிகு கே. என். டக்ளஸ் தேவானந்தா அவர்கள் எமது பிரதேச வளர்ச்சிக்காக ரூபா 06 கோடியே 24 இலட்சத்து 35 ஆயிரம் ஒதுக்கித் தந்துள்ளார்.

எமது பிரதேசத்தின் அபிவிருத்தி புனரமைப்பு பணிகளுக்கு எம் மக்களினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று நிதி ஒதுக்கீடுகளை வழங்கி எமது பிரதேசம் வளம் பெற விளங்கச் செய்து, மக்கள் தமக்கு அளித்த அதிகாரத்தினைச் சிறப்பாக செயற்படுத்தி அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்று ஒரு வருட காலத்தில் பல செயற் திட்டங்களை நிறைவேற்றி சாதனை படைத்து, எம் மக்களின் இதயம் நிறைந்து 'மக்கள் சேவையே மகேசன் சேவை' எனக் கருதி அர்ப்பணிப்புடன் செயற்படும் மக்களின் இதயம் நிறைந்த கௌரவ அமைச்சரும், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் செயலாளர் நாயகமுமான மதிப்பிற்குரிய கே. என். டக்ளஸ் தேவானந்தா, அவர்களுக்கும் முன்னாள் நாடளுமன்ற உறுப்பினரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமாகிய உயர்திரு க.வே. குகேந்திரன் (ஜெகன்) அவர்கட்கும் நன்றியைத் தெரிவிப்பதோடும், எமது சபை மூலமும் பிரதேச அபிவிருத்தி திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளோம் என்பதை மக்களுக்குச் சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம்.

இங்ஙனம்
**பரஞ்சோதி இரவீந்திரன்**
**உப தலைவர் பருத்தித்துறை பிரதேச சபை.**

### பிரமாண அடிப்படையிலான மூலதன நிதி

| இல | நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1 | மீனவர் இளைப்பாற்று மண்டபம் அமைத்தல் மணற்காடு | 125,000 |
| 2 | குடத்தனை அரசர் தமிழ்கலவன் பாடசாலை | 125,000 |
| 3 | உபய கதிர்காமம் பாலம்அமைத்தல் | 100,000 |
| 4 | குழாய்க்கிணறு அமைத்தல் கொற்றாவத்தை | 25,000 |
| 5 | திறந்தகிணறு அமைத்தல் குடத்தனை | 25,000 |
| 6 | திறந்தகிணறு அமைத்தல்-பொற்பதி | 25,000 |
| 7 | திறந்தகிணறு அமைத்தல் மணற்காடு | 25,000 |
| 8 | பனிக்கர் குளம் திருத்துதல் திக்கம் | 50,000 |
| 9 | தம்பத்தனை வீதி புனரமைப்பு-துன்னாலை | 100,000 |
| 10 | மணற்காடு கடற்கரைவீதி புனரமைப்பு | 175,000 |
| 11 | நாவலர் வீதி திருநாவலூர் | 100,000 |
| 12 | பலாவி பற்சந்தை வீதி பொலிகண்டி | 125,000 |

### பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம்

| இல | நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1 | கெருடாவில் பாடசாலை வீதி திருத்தம் | 200,000 |
| 2 | கூவில் தீபஜோதி முன்பள்ளி கட்டிடம்அமைத்தல் | 150,000 |
| 3 | கற்கோவளம் முன்பள்ளி தளபாடக் கொள்வனவு | 90,000 |
| 4 | அல்வாய் நக்கீரன் முன்பள்ளி தளபாடக்கொள்வனவு | 50,000 |
| 5 | சுப்பர்மடம் சித்தி விநாயகர் முன்பள்ளி தளபாடக் கொள்வனவு | 50,000 |

### பி. எஸ். டி. ஜி. வேலைகள்

| இல | நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1 | பொலிகண்டி ஆலடி வீதி புனரமைப்பு | 1000,000 |
| 2 | சாரையடி நறுவிலி வீதி புனரமைப்பு | 800'000 |
| 3 | கார்த்திகேசர் வீதி புனரமைப்பு | 150,000 |

### சபை நிதி

| இல | நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1 | குடத்தனை சிறுவர் பூங்கா அமைத்தல் | 175,000 |
| 2 | குடத்தனை புதிய நூலகம் விஸ்தரிப்பு | 100,000 |
| 3 | குடத்தனை சந்தைகட்டடம் புனரமைப்பு | 190,000 |
| 4 | குடத்தனை பொது நூலக வளாகத்திற்குள் பள்ளமானஇடத்தில் கழி பரவுதல் | 20,000 |
| 5 | மானாண்டி சந்தைக்கடை கதவு நிலையமைத்தலும் பூச்சு வேலையும். | 30,000 |
| 6 | குடத்தனை பழைய சந்தைக்கிணறு சுற்று முற்றம் அமைத்தல் | 8,500 |
| 7 | குடத்தனை எட்பிலோ கிணறு சுற்று முற்றம் அமைத்தல் | 7,000 |
| 8 | குடத்தனை பனைநின்றான் காட்டுக்கிணறு சுற்றும் முற்றம் அமைத்தல் | 7,000 |
| 9 | துன்னாலை மாதா கோயில் வீதி புனரமைத்தல் | 150,000 |
| 10 | அல்வாய் திருவி சீமா வீதி புனரமைப்பு | 85,000 |
| 11 | அம்மன புதியசுடலை வீதி புனரமைப்பு | 100,000 |
| 12 | ஆண்டிபபனை வீதி புனரமைப்பு-குடத்தனை | 100,000 |
| 13 | கதிரவேற்பிள்ளை வீதி புனரமைப்பு-புலோலி மேற்கு | 225,000 |
| 14 | அலவாய் மேற்கு நெல்லியோடை வீதி புனரமைப்பு | 100,000 |
| 15 | தவைச்சந்தி வெளி விழுந்தான் வீதி புனரமைப்பு-அல்வாய் | 80,000 |
| 16 | கொற்றாவத்தை பூமகள் வீதி புனரமைப்பு | 100,000 |
| 17 | மாயக்கை தெனியம்மன்வீதி புனரமைப்பு | 100,000 |
| 18 | அல்வாய் பழைய வேதக்கோயில் வீதி புனரமைப்பு | 100,000 |
| 19 | கெருடாவில் காட்டுப்புலம் வீதி புனரமைப்பு | 100,000 |
| 20 | மணற்காடு வீதி புனரமைப்பு | 100'000 |
| 21 | குடத்தனை கரிகோப்பு வீதி புனரமைப்பு | 100,000 |
| 22 | திக்கம் நெல்லியோடை வீதி புனரமைப்பு | 100,000 |
| 23 | தட்டாதெரு வீதி புனரமைப்பு-தும்பளை | 15,000 |
| 24 | குடத்தனை பொது நூலகத்தைச்சுற்றி கம்பிவேலி அமைத்தல் | 20,000 |
| 25 | மணற்காடு மீன்சந்தை வளாகம் களிமணல்பரவி உயர்த்துதல் | 45,000 |
| 26 | குடத்தனை கிணறுக்கு சுற்று முற்றம் அமைத்தல் | [illegible],000 |
| 27 | குடத்தனை சாலமி குளம் துப்பரவு செய்தல் | 6,000 |

### றாண்

| இல | நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1 | கற்கோவளம் பொதுச் சந்தை | 1000,000 |
| 2 | புலோலி கருகம்பன் சுடலை | 700,000 |
| 3 | கெருடாவில் விவேகானந்தா சனசமூக நிலையம் | 500,000 |
| 4 | பொலிகண்டி அம்பிகை சனசமூக நிலையம் | 500,000 |
| 5 | அல்வாய் இளம்பிறை சனசமூக நிலையம் | 500,000 |
| 6 | கொருடாவில் அண்ணா சனசமூக நிலையம் | 500,000 |
| 7 | புலோலி அறிவகம் சனசமூக நிலையம் | 500,000 |
| 8 | வத்தனை கலைவாணி சனசமூக நிலையம் | 500,000 |
| 9 | பருத்தித்துறை இன்பருட்டி சனசமூக நிலையம் | 500,000 |
| 10 | குடத்தனை சுடரொளி சனசமூக நிலையம் | 500,000 |
| 11 | திக்கம் மத்திய சனசமூக நிலையம் | 1000,000 |
| 12 | புலோலி புனித ஆரோக்கிய அன்னை சனசமூக நிலையம் | 500,000 |
| 13 | வட அல்வாய் இளங்கோ சனசமூக நிலையம் முத்துமாரி படிப்பக புனரமைப்பு | 500,000 |
| 14 | துன்னாலை வல்லியானந்தா சனசமூக நிலையம் | 200,000 |
| 15 | புலோலி மேற்கு திருநாவலூர் சனசமூக நிலையம் | 400,000 |
| 16 | அல்வாய் குமுதேணி சனசமூக நிலையம் | 400,000 |
| 17 | அல்வாய் நக்கீரன் சனசமூக நிலையம் | 400,000 |
| 18 | வியாபாரிமூலை கலைமணி சனசமூக நிலையம் | 300,000 |
| 19 | பூவக்கரை கலைமகள் சனசமூக நிலையம் | 300,000 |
| 20 | ஸ்ரீசிவ சுப்பிரமணியம் சனசமூக நிலையம் | 250,000 |
| 21 | பொலிகண்டி மக்கள படிப்பக சனசமூக நிலையம் தளபாடம் புத்தகம் கொள்வனவு | 175,000 |
| 22 | அல்வாய் புனித சவேரியார் அறிவகம் சனசமூக நிலைய புத்தகம் கொள்வனவு | 35,000 |

### றாண் நிதி ஒதுக்கீடு -2001

| இல | நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1 | யா/ கலட்டி றோ.க.த.க. பாடசாலை | 400,000 |
| 2 | யா/ கொற்றாவத்தை அ.மி. த.க. பாடசாலை | 1000,000 |
| 3 | யா/ அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை | 300,000 |
| 4 | யா/ வேலாயுதம் மகா வித்தியாலயம், பருத்தித்துறை | 700,000 |
| 5 | யா/ குடத்தனை கரையூர் றோ.க.த.க. பாடசாலை | 300,000 |
| 6 | பொலிகண்டி சனசமூக நிலையம், மக்கள் படிப்பகம், பொலிகண்டி வல்வெட்டித்துறை. | 250,000 |
| 7 | புனித சவேரியார் அறிவகம் சக்கோட்டை அல்வாய் | 75,000 |
| 8 | பொதுக் கிணறு அமைத்தல் கல்லூரி வீதி பருத்தித்துறை | 50,000 |
| 9 | அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திரர் சுவாமி ஆலய பரிபாலன சபை, ஒல்லையயபதி புலோலி தென்மேற்கு, புலோலி. | 200,000 |
| 10 | அருள்மிகு மஹாமாரி அம்பாள் தேவஸ்தானம் (பண்டாரி அம்மன்கோவில்) புலோலி மேற்கு தம்பசிட்டி பருத்தித்துறை. | 150,000 |
| 11 | புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம், சக்கோட்டை, அல்வாய் | 400,000 |
| 12 | ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை, தபுருவளை தும்பளை பருத்தித்துறை. | 300,000 |
